தமிழ்ப் பொழில்

தஞ்சைக் கரந்தைத் தமிழ்ச் சங்கத் திங்கள் வெளியீடு

துணர்	திருவள்ளுவர் யாண்டு உ௦௦௦	மலர்
	சௌமிய, ஆனி	
சரு	1969–ஜூன்–ஜூலை	ரு

(சென்ற இதழின் தொடர்ச்சி).

செயப்பாட்டு வினை

திரு. S. அகத்தியலிங்கம், எம்.ஏ.பிஎச். டி. (கேரளா),
பிஎச். டி. (இந்தியானா)
மொழியியல் துறை, அண்ணாமலைப் பல்கலைக்கழகம்.

அடுத்து அறிஞர்களிடையே காணப்படும் "திராவிட மொழிகளில் செய்வினைச் சொற்களே [active expressions] செயப்பாட்டு வினைப் பொருளைத் தந்து நிற்கின்றன" என்ற கருத்தினை ஆராய்வோம். மேனாட்டு அறிஞர்களும் கீழ்நாட்டு அறிஞர்கள் பலரும் இவ்வெண்ணத்தைக் கொண்டுள்ளனர்.[1] எடுத்துக்காட்டாக

---

1. The Passive Voice is expressed by the infix patu. The inherent beauty of the Tamil language is evident in its use of the active form in the sense of passive.

   Ilakkuvanar, 1961, p. 153.

   இதே கருத்தை சுப்பிரமணிய சாஸ்திரியாரும் கொண்டுள்ளார் என்பது

   "Since the active form itself is capable of giving passive sense in Tamil, we need not discuss the cases where the passive sense is conveyed in some of the examples noted above" (Subramanya Sastri, 1934, p. 151)

   எனக் கூறுவதிலிருந்து அறியலாம்.

   Ilakkuvanar, 1946, 133-134.

   சுப்பிரமணிய பிள்ளை, 1939, ப. 137.

   தேவநேயப் பாவாணர், 1945, ப. 117.

   Caldwell, 1961, p. 465.

76. படித்த பாடம். 77. அழித்த கோயில்.

78. சொன்ன செய்தி. 79. கொடுத்த பணம்

போன்றவற்றில் வருகின்ற பெயரெச்சங்கள் செய்வினையாயினும் செயப்பாட்டுவினைப் பொருளையே தருகின்றன எனக் கூறுகின்றனர்.[2]

படித்த பாடம் 'the lesson that was read'

அழித்த கோயில் 'the temple that was demolished'

சொன்ன செய்தி 'the information that was conveyed'

கொடுத்த பணம் 'the money that was given'

போன்றவை ஆங்கிலத்தில் மொழி பெயர்க்கப்படும் போது பெரும்பாலும் செயப்பாட்டு வினையாகவே மொழி பெயர்க்கப் படுகின்றன. இதுபோன்றே பழைய உரையாசிரியர்களும்.

80. அடைத்த........கதவு (புறம் 44-11)
அடைக்கப்பட்ட....................கதவு

81. குடுமி களைந்த நுதல் (புறம்)
குடுமி யொழிக்கப்பட்ட சென்னி

82. குறைந்த உலகம் (புறம்)

குறைக்கப்பட்ட உலகம்

என்று இவ்வாறு செய்வினைச் சொற்களுக்கு செயப்பாட்டு வினையில் பொருள் எழுதிச் சென்றுள்ளமையும் காணத்தக்கது.

---

2. Relative participles and relative participle nouns are the parts of the verb which are most frequently used in the manner.................

Caldwell, 1961, p. 465,

The participle has no voice : one and the same form may have either active or passive meaning depending on the context,

Andronov, 1965, p. 33.

பெரும்பாலும் பெயரெச்சங்களே செய்வினைச் சொற்கள் செயப்பாட்டு வினைப் பொருளைத் தருவதற்குரிய எடுத்துக் காட்டுக்களாகக் காட்டப்படுகின்றன. கால்டுவெல்லும் "திராவிட மொழிகளில் செய்வினைச் சொற்கள் செயப்பாட்டுவினைப் பொருளில் வருகின்றன" என்றும் "பெயரெச்சங்களும் வினையாலணையும் பெயர்களுமே இத்தன்மையில் அடிக்கடி பயன்படுத்தப்படுகின்றன" என்றும் [1] கூறுவர். இதே கருத்தை ஆந்திரனோவ் என்ற ருசிய நாட்டுத் தமிழறிஞரும் கொண்டிருத்தல் காணலாம். [2]

செய்வினைச் சொற்கள் எந்நிலையில் செயப்பாட்டு வினைப் பொருளைத் தருகின்றன என்பதை ஆராய்ந்த அறிஞர்களின் விளக்கங்களையும் ஆராய்தல் நலம்.

1. செய்தவன் அல்லது கருத்தா (Subject) தெளிவற்ற நிலையில் அல்லது வாக்கியங்களில் கருத்தா இல்லாத நிலையில் செயப்பாட்டு வினைப் பொருளில் வருகின்றன என்பர். [3] எழுவாய் மறைந்து நிற்கின்ற நிலையில்

படித்த பாடம் (76) சொன்ன செய்தி (78)

83. அடைத்த கதவு

போன்றவை

the lesson that was read

the information that was conveyed

the door that was closed

எனச் செயப்பாட்டுப் பொருளில் தரப்படுதல் காண்கிறோம்.

2. பெயரெச்சங்களை அடையாகக் கொண்டிருக்குஞ் சொற்கள் அப்பெயரெச்சங்களுடன் வரும் வினைச் சொல்லின்

1. Caldwell, 1961, p. 465.
2. Audronov, 1965. p. 33.
3. டாக்டர் மு. வ. ப.
Jespersen.

எழுவாயாக இல்லாதபோதும் இந்நிலை ஏற்படக்காணலாம். [1]

84. பையன் படித்த பாடம்

85. பையன் சொன்ன

86. பையன் அடைத்த கதவு

போன்றவை

the lesson read by the boy.

the information conveyed by the boy.

the door closed by the boy.

எனப் பொருள் தருவதாகக் கருதுகின்றனர். இவற்றுள் 'பாடம்', 'செய்தி', 'கதவு' போன்ற பெயர்கள் முறையே 'படித்த', 'சொன்ன', 'அடைத்த' போன்ற வினைகளில் எழுவாயாக இல்லை. இந்நிலையில் இவ்வினைச் சொற்கள் செயப்பாட்டுப் பொருளைத் தருகின்றன என எண்ணுகின்றனர்.

3. சில சொற்களின் பொருளைப் பொறுத்தும் இப்பண்பு காணப்படுகிறது என்பர். [2] எடுத்துக்காட்டாக

87. பார்த்த பையன், 88. படித்த பையன்.

89. சொன்ன பையன்.

போன்றவை செயப்பாட்டுப் பொருளில் வருவதில்லை என்பர்.

---

1. A participle has active meaning if the agent of the action it denotes is identical with the word it qualifies; a participle has passive meaning if the agent of the action it denotes is not identical with the word it qualifies. In the latter case, the word denoting the agent of the action is in the nominative: *patam patitta* paiyan 'the boy who has read the lesson', but *paiyan patitta patam* 'the lesson read by the boy'.

   Andronov, 1965, p. 33.

2. வினையாலணையும் பெயரையும் பெயரெச்சத்தையும் ஆராயும் ஆந்திரனோவ் சொற்களின் வரிசை முறையையும் பொருளையும் பொறுத்தும் செய்வினை செயப்பாட்டு வினை நிர்ணயம் செய்யப்படுகின்றன.

எனக் கூறுதல் காண்க.

   Andronov, 1959, p. 249.

இந்நிலைகளை மனதில்கொண்டு செய்வினைகள் எந்நிலையில் செயப்பாட்டு வினையாகப் பயன்படுகின்றன என்பதை ஆராய்தலே இக்கட்டுரையின் முக்கிய நோக்கம்.

எழுவாய் வெளிப்படையாக வராத இடங்களில் பல செயப்பாட்டு வினையாக பொருள் தரப்படுதல் தமிழ்மொழியில் பொதுவாகக் காணப்படுவதுதான். இதுபோன்றே செயப்பாட்டு வினைகளுக்குச் செய்வினையில் பொருள் தரப்படுவதையும் காணலாம்.

90. " .... வேற்கணார்க் கியற்றப்பட்ட
மன்னிய மதுவின்"

என்பதற்கு "மகளிர்க்குச் சமைத்த மது" எனவும்

91. "........ .....தங்கள் கண்ணென வைக்கப்பட்ட
நீதி மேல் ...."

என்பதற்கு "தம்முடைய கண்ணென்று துணிந்து வைத்த நீதியில்" எனவும் நச்சினார்க்கினியர் பொருள் எழுதுதல் காண்க. இதனால் செய்வினையையும் செயப்பாட்டு வினையையும் ஒன்றாக்குவதோ செய்வினை செயப்பாட்டு வினையாக பயன்படுகிறது என்றோ, செய்வினை, செயப்பாட்டு வினை வேறுபாடு இல்லையென்றோ கூறுவது பொருந்தாது.

அதாவது

படித்த பாடம் (76) — படிக்கப்பட்ட பாடம்

சொன்ன செய்தி (78) — சொல்லப்பட்ட செய்தி

அடைத்த கதவு (83) — அடைக்கப்பட்ட கதவு

எனக் கூறுதல் பொருந்தாது.

படித்த பாடம், சொன்ன செய்தி, அடைத்த கதவு

போன்றவற்றில் "பையன்". "யாரோ" போன்ற எழுவாய்ச் சொற்களை [Nominative] இட்டு

92. { பையன் / யாரோ } படித்த பாடம்

போன்ற இலக்கணப் பிழையற்ற வாக்கியங்களை உருவாக்கலாம்.

ஆனால்

93. படிக்கப்பட்ட பாடம்

போன்ற செயப்பாட்டு வினைச் சொற்களில் "யாரோ", "பையன்" போன்ற எழுவாய் வேற்றுமைச் சொற்களை இட்டுக்கூற முடிவதில்லை.

94. *பையன் படிக்கப்பட்ட பாடம்

95. *பையன் சொல்லப்பட்ட செய்தி

போன்றவைஇலக்கணப்பிழையுடையன.[1] செயப்பாட்டுவினைச்

1. தமிழில் பழக்கமான செய்திகளைக் குறிக்க "படு" இட்டுக் கூறுதல் உண்டு "நன்றாக சாப்பிடப்பட்ட பையன்" என்பது 'நன்றாக சாப்பிடும் பழக்கத்தைக் கொண்டவன்' என்ற பொருளில் வரும். ஆனால் ' பையன் படிக்கப்பட்ட புத்தகம்" என செயப்பாட்டு வினையில் இவ்வாறு வருவதில்லை. எனவேதான் இது இலக்கணப் பிழையுடையது எனக் கருதப்படுகிறது இவை இரண்டும் வெவ்வேறு இலக்கணப் பிரிவை சார்ந்தவை.

"........................
எல்லாரும் எள்ளப் படும்" (குறள் – 191)

"........................
வேந்து செறப்பட் டவர்" (குறள் – 895)

போன்று செயப்பாட்டு வினையுடன் எழுவாய் வேற்றுமைச் சொற்கள் வருதலும் காணலாம். இவை செய்யுள் வசதிக்காக [poetic freedom] வருவன என்றே கொள்ளுதல் வேண்டும். இவற்றிற்கு உரை எழுதப்போந்த பரிமேலழகர் "எல்லாராலுமிகழப்படும்" என்றும் "வேந்தனாற் செறப்பட்ட அரசர்" என்றும் எழுதுதல் காண்க.

சொற்கள் "ஆன்" வேற்றுமைச் சொற்களை ஏற்க செய்வினைச் சொற்கள் இவற்றை ஏற்பதில்லை.

96. *பையனால் படித்த பாடம்

97. *பையனால் அடைத்த கதவு

98. *பையனால் சொன்ன செய்தி

என்பன இலக்கணப் பிழையுடையன. ஆனால்

99. "...................... சான்றோரா
னெண்ணப் படவேண்டா தார்" (குறள் – 922)

100. "...................................
சுற்றத்தாற் சுற்றப்படும்" (குறள் – 525)

101. "...................... ஒருவரா
லச்சப் படாஅ தவன்" (குறள் – 1004)

102. "........... மற்றவன் றனாலே
பொறிமுதல் அடர்க்கப்பட்டான்" (சிந்தாமணி–475)

103. பையனால் படிக்கப்பட்ட பாடம்

104. பையனால் அடைக்கப்பட்ட கதவு

போன்றவை இலக்கண நெறியுடையவை. இப்பண்பு இவ்விருவகை சொற்களும் வெவ்வேறு என்பதைக் காட்டும். வசதி கருதி ஒன்றுக்கு இன்னொன்றை இட்டுப் பொருள் கூறுவது வேறு. ஒரு மொழிக்குரிய இலக்கணக் கூறுகளை வகுப்பது வேறு. உரையாசிரியர்களும் ஏனையோரும் செய்வினைக்குச் செயப்பாட்டு வினையில் பொருள் கூறுவதால் செய்வினை செயப்பாட்டு வினையாகவும் செயப்பாட்டு வினைக்குச் செய்வினையில் பொருள் கூறுவதால் செயப்பாட்டுவினை செய்வினையாகவும் மாற முடியாது. இவற்றை

படித்த பாடம் (76) — கற்ற பாடம்

சொன்ன செய்தி (78) — கூறிய செய்தி

அடைத்த கதவு (83) — மூடிய கதவு

எனவும், ஆங்கிலத்தில் இவற்றை முறையே

the lesson that was read [by someone]

the information that was conveyed [by someone]

the door that was closed [by someone]

எனக் கூறுதற்குப் பதில்

the lesson that [someone] read

the information that [someone] conveyed

the door that [someone] closed

எனவும் செய்வினையில் கூறமுடிவதும் இவண் கருதத்தக்கது.

அடுத்து பெயரெச்சங்களை அடையாகக் கொண்டுவரும் பெயர்ச்சொற்கள் பெயரெச்சத்தின் எழுவாயாக இல்லாத போது செயப்பாட்டுப் பொருளைத் தந்து நிற்கிறது என்பதும் பொருந்தா வாதமாகவே உள்ளது.

பையன் படித்த பாடம் (92)

என்பது செயப்பாட்டு வினையாகவும்

105. பாடம் படித்த பையன்

என்பது செய்வினையாகவும் வருவதற்குக் காரணம் "பையன்" என்பது "படித்த" என்ற வினையின் எழுவாயாகவும் "பாடம்" என்பது எழுவாயாக இல்லாமலும் இருப்பதுதான் இதற்குக் காரணம் எனக் கருதுகின்றனர்.

மட்டும் கடைசிவரை வலியுறுத்தி வந்திருக்கிருர். அவற்றுள் முக்கியமானது காங்கிரஸ் இயக்கத்துக்கும் தாய்மொழிக்கும் இருந்த தொடர்பு பற்றியது.

1917—18இல் தமிழுக்குத் தமிழகத்தில் முக்கிய இடம் இருக்கவேண்டுமென்று சொன்ன திரு. வி. க., 14 ஆண்டுகள் கழித்துப் பின்வருமாறு பேசுகிருர்: "தமிழ் நாட்டின் முழு விடுதலை தமிழ்மொழியின் ஆக்கத்திலேயே இருக்கிறது. மற்ற மற்ற முயற்சிகள் வேண்டாமென்று யான் கூறுகிறேனில்லை. தமிழ்த்தாய்க்குப் பலதிற அடிமைப்பாடுகள் உண்டு. ஒவ்வொன்றன் விடுதலைக்கு ஒவ்வொருவித இயக்கம் வேண்டற்பாலதே. முழுவிடுதலை தமிழ்மொழியின் ஆக்கத்திலுண்டு என்பதை மட்டுந் தமிழர்கள் மறத்தலாகாது. தமிழ்மொழி ஆக்கம் பெருமல் பெறும் விடுதலை முழு விடுதலையாகாது"[21]

படித்த பட்டதாரிகளைமட்டுமே கொண்டிருந்த அக்காலக் காங்கிரஸ், 14 ஆண்டுகளில் தமிழைப் பொறுத்தவரை எந்த மாறுதலும் அடையவில்லை என்பதில் வியப்பு ஒன்றுமில்லை. 1967இல் பதவியிலிருந்து தள்ளப்படும் வரையில், காங்கிரஸ் இயக்கமும் கட்சியும் தமிழைப் பற்றிய தங்கள் கொள்கையை மாற்றிக்கொள்ளவே இல்லை!

"பண்டைத் தமிழர் வழக்க ஒழுக்கங்கள் நிலவ வேண்டுமாயின், முதலாவது தமிழ்மொழி வளர்ச்சிக்கு உழைத்தல் வேண்டும். ஒருவர் இருவர் சேர்ந்து சங்கங்கள் ஏற்படுத்தி உழைத்து வருதலால் சிறிதும் பயன் விளையாது அரசகாரியம் முழுவதுந் தமிழிலேயே நடைபெறல் வேண்டும்" என்று 9–12–1918இல் எழுதினர். திரு. வி. க. ஆயினும், 1967 பிப்ரவரியில், காங்கிரஸ் கட்சி ஆட்சி பீடத்திலிருந்து இறங்கும் வரை இக்குரல் அதன் செவியில் விழவே இல்லை! திரு. வி. க நினைத்தபடியே, மொழிப்பற்றின்மை காங்கிரஸ் கட்சியின் பலவீனங்களுள் முக்கியமான ஒன்ருக இருந்து, அக்கட்சியையே சரித்துவிட்டது.

வேருெரு தோரணை

பெண்ணின் பெருமை, தொழிலாளர் நலன். இயற்கையோடு இயைந்த வாழ்வு என்பன திரு. வி. க. வற்புறுத்தி

21. நவசக்தி 25—11—1931.

வந்த வேறு சில கொள்கைகள் மற்றக் கருத்துக்களை நேற்று—இன்று—நாளை எனவும் இன்று—நாளை எனவும் வகுத்து எழுதிய திரு. வி. க. இந்த மூன்று கருத்துக்களை விவரிக்கையில் வேறொரு தோரணையையும் கையாள்கிறார்.

பெண்களுக்கு உரிமை என்ற முழக்கத்தை மேற்கிலிருந்து எடுத்துக்கொண்டாலும் அதற்கு இந்திய உருவம் தரவேண்டும் என்பதிலேயே அவர் கண்ணும் கருத்துமாக இருந்தார்... "தற்காலப் பெண்மக்கள் கொள்கையை முத்திறமாகப் பிரிக்கலாகும்... ஒன்று மேல்நாட்டுப் பெண்மக்களைப் போலத் தாங்களும் ஆகவேண்டுமென்பது. மற்றொன்று தம்நாட்டு வழக்க ஒழுக்கங்களுக்கு மாறுபடாத சில மேல்நாட்டு வழக்க ஒழுக்கங்களை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்பது. வேறொன்று நம்நாட்டு வழக்க ஒழுக்கங்களை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்பது. வேறொன்று நம்நாட்டு வழக்க ஒழுக்கங்களையே பற்றி நடக்க வேண்டுமென்பது.

"முதல் கூட்டத்தவர் பெண் மக்களுக்குரிய அச்சம், நாணம், மடம், பயிர்ப்பு என்னும் நான்கு குணங்களையும் மறுப்பவர்; ஆண்களுக்கும் பெண்களுக்கும் வேற்றுமையில்லை என்று கூறுபவர்; பொதுக்காரியங்களில் ஆடவர்களோடு கலந்து உழைக்க வேண்டுமென்று சொல்பவர்; தற்கால ஆசார சீர்திருத்தக்காரர் கொள்கைகளைப் பொன்னேபோல் போற்றுவர். இவர்கள் நோக்கம் ஆடவர்களைப் போலச் சட்ட சபைகளிலும், நிருவாக சபைகளிலும் அங்கத்தவராக வேண்டுமென்பது. இக்கூட்டம் நமது தேசத்தில் பல பாகங்களிலும் பெருகி வருகிறது".

"இரண்டாவது கூட்டத்தார் தம் வழக்கவொழுக்கங்களை விடாமலும், மேல் நாட்டவர் வழக்க ஒழுக்கங்களில் கொள்ளத்பாலனவற்றைக் கொண்டும், தள்ளற்பாலனவற்றைத் தள்ளியும், தம் வாழ்க்கையை நடத்த வேண்டும் என்னும் கொள்கையுடையவர், இக்கூட்டத்தார் ஆடவர்களோடு சட்டசபைக்குப் பறந்துசெல்ல முயல்வதில்லை. அவர் தங் கல்வி அறிவு ஒழுக்கத்தைப் பண்படுத்திக் கொள்ளவே முயற்சி செய்கின்றனர். தமக்குத் தெரியாத காரியங்களில் தலைப்பட அவர் ஒருப்படுவதில்லை; தம் வீடுகளை உறிந்து வீடுகளைப் போலப் பாதுகாத்துக் கொண்டிருக்கின்றனர்; தேச காரியங்களில் தலை

யிட்டுள்ள தம் ஆடவர்களுக்கு ஊக்கத்தை வளர்ப்பதற்குப் பெருந்துணை செய்து கொண்டிருக்கின்றனர். இக்கூட்டத்தவர் ஆடவர்கள் செயலுக்குப் பெருந்துணைபுரியுந் தேவிமார்களாயிருக்கின்றனர்".

"மூன்றாவது கூட்டத்தார் கல்வியறிவின்றிக் கர்ணபரம்பரையாகப் பேசியதையே பேசியும் செய்வதையே செய்துங் காலங்கழித்து வருகின்றனர். அக்கூட்டத்தார் தம்மை ஆடவர்களின் வேலைக்காரிகள் என்று நினைத்துக் கொண்டிருக்கின்றனர். இவர்களைப் பற்றி விரித்துரைக்க வேண்டுவது அநாவசியம்".

"இம் முத்திறக் கூட்டத்தவருள் எவரைக் கொள்ளுவது எவரைத் தள்ளுவது என்பது கேள்வி. முதல் கூட்டத்தவரால் நமது தேசம் பாழ்படும் என்பது நிச்சயம். அப்பெண் மணிகள் தாங்கள் வாழும் நாடு இந்தியா என்பதை மறந்து வேலை செய்யத் தொடங்குகிறார்கள். அவர்கள் தாங்கள் கெடுவதுமன்றிப் பிறரையும் கெடுக்க முயல்கின்றார்கள். அவர்கள் வழி நம் பெண்ணுலகஞ் செல்லுமாயின் நம் நாட்டுக் கற்பொழுக்கங் குன்றிப் புருஷபக்தி சிதைந்துவிடும் என்பது சத்தியம் மேல்நாட்டு நாகரிக வழி நமது நாட்டைத் திருப்ப முயலும் பெண்மக்களை அநாதரவு செய்யவேண்டுவது நம் பெருங்கடமை".

"இரண்டாவது கூட்டத்தாரை ஆதரவு செய்யவேண்டுவது நமது இன்றியமையாக் கடமை. இப்பெண்மணிகள் நம் தேச வழக்க ஒழுக்கத்தைக் காக்குந் தெய்வங்கள். இவர்களாலேயே நம் நாடு செழுமையுற வேண்டும். இவர்களைக் கொண்டே நாம் பெண்ணுலகத்தைத் திருத்த வேண்டும்".

"இவ்விரண்டாவது கூட்டத்தவர் வாயிலாக மூன்றாவது கூட்ட ஏழைகட்குப் போதிய உதவி செய்விக்கவேண்டும்". 22

திரு. வாடியா அவர்களுடன் சேர்ந்து சென்னையில் (முதல் இந்தியத்) தொழிற் சங்கத்தை அமைத்தவர் திரு. வி க. தொழிலாளரை ஒன்று திரட்டி அவர்களை நாட்டுத் தொண்டில் ஈடுபடுத்த வேண்டுமென்பது இவருடைய நோக்கங்களில்

22 தேசபக்தன்: 6—12—1918

ஒன்று தமிழகக் காங்கிரஸ் இயக்கத்தார் தமிழைப் புறக் கணித்தது போலவே தொழிலாளரையும் புறக்கணித்து வந் தார்கள். அந்தத் தவறான போக்கை எடுத்துக்காட்டுவதிலும் காங்கிரசில் தொழிலாளரை ஈடுபடுத்துவதிலும் எப்போதும் முன்நின்றார் திரு. வி. க.

"நமது நாட்டில் ஏழைத் தொழிலாளர்களே பெரிதும் நிரம்பியிருக்கிறார்கள். இவர்தம் முன்னேற்றத்துக்காக இது காறும் காங்கிரஸ்காரராதல், பிறராதல் உழைக்க முன்வந்தா ரில்லை. ஏழைத் தொழிலாளரைக் கவனியாது சுயராஜ்ஜிய கூச்சலிடுவதால் சிறிதும் பயன் விளையாது. காங்கிரஸில் இதுகாறும் செய்யப்பட்ட தீர்மானங்கள் யாவும் கற்றவர்கள் முன்னேற்றத்தைப் பற்றியனவேயாகும். இத் தீர்மானங் களால் முன்னேற்றமடையாதென்பது திண்ணம். கற்றவர் கள் ஒன்றுகூடித் தங்கள் முன்னேற்றத்துக்காகப் பாடுபட்டு வருவதையும், அவர்கள் ஏழைத் தொழிலாளர்களைக் கவனி யாது வாளா காலங்கழித்து வருவதையும் அரசாங்கத்தார் நன்கு உணர்ந்து சிறு சிறு சீர்திருத்தங்களையே வழங்கிக் கொண்டு வருகின்றனர். ஏழைத் தொழிலாளர் அரசியல் ஞானமுடையவராகிச் சுயஆட்சிக் கிளர்ச்சிகளில் ஈடுபட்டால் தான் அரசாங்கத்தார் நமக்குச் சுயாட்சி வழங்குவர் என்பதில் சந்தேகமில்லை. ஏழைத் தொழிலாளர் முன்னேற்றத்துக்குப் பாடுபடாமல் கற்றவர் சிலர் சேர்ந்துகொண்டு சுய ஆட்சி கூச்சலிட்டு அதைப் பெற முயல்வது முடவன் கொம்புத் தேனுக்கு ஆசைப்படுவதையொக்கும். உண்மையாக சுய ஆட்சிக் கிளர்ச்சி செய்வோர் ஏழைத் தொழிலாளரது முன் னேற்றத்துக்காகப் பாடுபடுவர். ஏழைத் தொழிலாளர்க்காகப் பாடுபட முன்வராது சுய ஆட்சிக் கிளர்ச்சி செய்வோரை என் னென்று கூறுவது? அவர் சட்டசபையிலாவது, நிருவாக சபையிலாவது அங்கத்தவராக வேண்டுமென்று எண்ணங் கொண்டு ஆரவாரஞ் செய்பவரேயாவர் இத்தகையினரை ஜனத்தலைவராகக் கொள்ளலாமோ?" [23]

இணையா இணை

கம்யூனிசக் கோட்பாடுகளையும் காந்தீயக் கோட்பாடுகளை யும் ஒன்றாக்கி ஒரு புதிய "தருமநெறிப் பொதுவுடைமை"யை

23 தேச பக்தன்: 15—10—1918

ஆக்கிவிட வெகுவாக முயன்றார் திரு. வி. க. இது ஒரு வகை யான இலட்சியக் கலைநோக்கு. இன்றைய நிலையில், இது, தொழிலாளரும் முதலாளரும் எட்ட முடியாத இலட்சியமாகத் தோன்றினும், அவருடைய நோக்குக்கும் இந்திய வாழ்வில் ஓரளவு ஆதாரம் இருந்தது.

"பண்டைக்காலத்தில் இந்தியாவில் முதலாளிகள் தொழிலாளர்களைத் தங்கள் பிள்ளைகள் போல் நேசித்து வந்தார்கள். தற்கால இந்தியா தன் சொரூபமிழந்து கிடத்தலால் அதைப் பற்றிக் கூறவேண்டுவது அநாவசியம். பண்டைக்காலமுறை இன்னும் நாட்டுப்புறங்களில் அனுஷ்டிக்கப்பட்டு வருகிறது. இந்திய முதலாளிகளின் போக்கிற்கும் மேல்நாட்டு முதலாளிகளின் போக்கிற்கும் பலவித வேற்றுமைகள் உண்டு. இந்தியர் தம் தொழில்முறையைக் கடவுள் வழிபாடாக நினைப்பர். மேல்நாட்டார் இதைப் பொருளீட்டு முறையாகக் கொள்வர். இந்தியர் தொழிலாளர்களுக்கென வீடு, வாசல், காணி, பூமி, மாடு, கன்று முதலியன உதவுவர். மேல்நாட்டார் தொழிலாளர்களுக்குக் கூலி ஒன்றே கொடுப்பர். இந்தியாவில் தொழிலாளர்களுக்கும் முதலாளிகளுக்கும் ஒருவகை உறவு உண்டு. அவ்வுறவு மேல்நாட்டவரிடத்தில் கிடையாது. இந்திய முதலாளிகள் வீட்டில் நடைபெறுஞ் சுபாசுப காரியங்களில் தொழிலாளர்கள் கலந்து சுகதுக்கங் கொண்டாடுவார்கள். இச்செயலை மேல்நாட்டார் அனுஷ்டிப்பதில்லை. எவ்வழியிலும் மேல்நாட்டில் தொழிலாளர்களுக்கும் முதலாளிகளுக்கும் நெருங்கிய நட்புரிமை ஏற்படுவதில்லை மேல்நாட்டு முதலாளிகள் செல்வச் செருக்கால் தொழிலாளர்களை வருத்தி வருவதைப் பெருந் தருமமாகக்கொண்டு வாழ்ந்து வந்தார்கள்"[24].

மற்றவற்றில் எல்லாம் "இந்தியம்" என்பதாக ஒரு நெறியை வற்புறுத்தி வந்தது போலவே, முதலாளி-தொழிலாளி உறவிலும் திரு. வி. க இந்தியமுறை இருக்கவேண்டுமென்று விரும்பினார். அதற்கு அடிப்படையாகவே இந்தியாவுக்கும் மேலை நாடுகளுக்கும் உள்ள வேற்றுமைகளை இதிலே விளக்கியுள்ளார். ஆனால் அன்பையும் பண்பையும் புறக்கணித்து அடித்தளத்தை நோக்கி விழுவதிலே உலகமக்கள்

24. தேச பக்தன்: 5—12—1918

அனைவரும் இப்போது ஒன்றுபட்டு நிற்பதை அவர் ஏனோ கடைசிவரை உணர்வே இல்லை!

காந்தி வழி

இதற்கு முக்கியமான காரணம், தொழில் வளர்ச்சியைப் பொறுத்தவரை காந்தியடிகளைப் போன்ற ஒரு கொள்கையையே இவர் கடைப்பிடித்தார். இயந்திரத் தொழில்களைப் பெருக்குவதை, அவர்போலவே இவரும் விரும்பவில்லை.

"மேல்நாட்டினின்றும் அநேக அநாசாரங்கள் நமது நாட்டில் குடியேறியிருக்கின்றன. அவைகளில் ஒன்று முதலாளி-தொழிலாளி வாதம். மேல்நாட்டு முதலாளிகள் நமது நாட்டில் புகுந்து தொழிற்சாலைகளை அமைத்தார்கள்; அமைக்கிறார்கள். உழவுத்தொழில், நெசவுத்தொழில், முதலிய கைத் தொழில்கள் செய்துவந்த தொழிலாளிகள், தங்கள் தொழில் முறைகளிலுள்ள பெருமையை உணராது, இயந்திரத் தொழிற்சாலைகளில் அமர்ந்து சிறுமை தேடிக்கொண்டார்கள். தொழிலாளிகள் கிராமங்களை விடுத்து நகரங்கள் போந்து வருந்தலானார்கள். இக்காரணத்தால் நமது நாட்டுக் கைத் தொழில்கள் நாசமாயின. இந்தியத் தொழிலாளிகள் மாதம் மாதம் சம்பளத்தைக் காசுவடிவமாகப் பெறுவதையே மேன்மையெனக் கொண்டு தங்கள் மானிய உரிமைகளை இழந்தார்கள்; அவ்வுரிமையை இழந்ததோடு அவர்கள் தங்கள் மானத்தையும் இழந்தார்கள். இயந்திரத் தொழிற்சாலைகளில் இந்தியத் தொழிலாளர்கள் பட்டுவரும் துன்பத்துக்கு அளவேயில்லை."[25]

"இந்தியாவிலும் சில இடங்களில் மேல்நாட்டு முறைப்படி தொழிலாளர் இயக்கந் தோன்றியிருக்கிறது. தற்காலம் இவ்வியக்கம் தொழிற்சாலைகளில் வேலை செய்வோருக்குச் சிறிது காப்பளிப்பதாகும். இந்தியாவில் தொழிற்சாலை பெருக்கப் பெருக இந்திய வாழ்விற்கே கேடு நிகழும். மேல்நாட்டு இயந்திரங்களும், மேல்நாட்டு முதலாளிகளும் பாரதமாதாவின் குருதியை உறிஞ்சத் துணைபுரிவதோ தாய்க்குச் சேய்கள் ஆற்றுங்கடன்? இந்தியமக்கள், கிராமங்களை விடுத்து, நகரங்களிற் போந்து, தொழிற்சாலைகளென்னும் சிறைவாய்ப்படாது, தங்கள் தங்கள் பதிகளி

25. *நவசக்தி* : 18—7—1921

லிருந்தே உழவுத்தொழிலையும் நெய்தற்றொழிலையும் ஓம்பி வருவார்களாக. தொழிற்சாலைகளும் இயந்திரங்களும் மேல் நாட்டை எரிப்பதைக் கண்கூடாகக் கண்டும், அப்பீடைகளை இந்தியாவில் ஏன் பெருக்க முயலல்வேண்டும்? அப்பெருக்கு இந்தியாவின் உயிர் நாடியாக உள்ள ஆன்ம ஞானத்தைக் கல்லிக் கல்லிப் பாழ்படுத்துமன்றோ? ஆன்மஞானத்திற் சிறந்த இந்தியா மேல்நாட்டு முதலாளி-தொழிலாளிபோரைப் போக்கக் காந்தியடிகள் வழிநின்று துணைபுரிவதாக. இப்பொழுது தோன்றியுள்ள உலகத் தொழிலாளர் இயக்கம், காந்தியடிகள் இயக்கத்தோடொன்ற, எல்லாம் வல்ல இறைவன் அருள் செய்வானாக. உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம்.”[26]

சமயப் பற்றிலும் சமரச அன்பு நெறியிலும் மூழ்கித் திளைத்த திரு. வி. க. எதையும் அவற்றின் வழியாகவே நடத்த முயன்றார். விரைவாக மாறிவரும் காலம், பழைய நோக்குகளில் பலவற்றைக் கைவிட்டு வருகிறது என்பதைக் கண்கூடாகக் கண்டும், அதை அவர் ஏற்றுக்கொள்ளவில்லை. அவர் ஏற்றுக்கொள்ளாததற்கு, அது அந்நிய நாட்டிலிருந்து வந்தது என்பதும் ஒரு காரணம்; அயல்நாட்டு ஆட்சியும் கல்விமுறையும் மக்களைப் பேடிகளாகவும் பயனிலிகளாகவும் ஆக்கி வந்ததைக் கண்ணெதிரே அவர் கண்டதும் ஒரு காரணம். அந்நியர்கள் இங்கே விளைவித்த அட்டகாசங்களை எதிர்த்துநின்ற தீரர்களிலே அவரும் ஒருவரல்லவா?

(தொடரும்)

மதிப்புரை

“A History of Tamil Literature” — *ஆசிரியர், திரு.* **J. M. சோமசுந்தரம் பிள்ளை,** *பி.ஏ., பி.எல்.,* **28 விரிவுரையாளர் கட்டிட வரிசைகன், அண்ணாமலை நகர்.** — *விலை ரூபா.* **12/-**

திருவாளர், **J. M. சோமசுந்தரம் பிள்ளை அவர்கள் தமிழ் இலக்கிய வரலாறு என்ற நூலை ஆங்கிலத்தில் எழுதியுள்ளார்கள். இதை நான்கு பகுதிகளாக வெளியிடும் திட்டத்தின் கீழ் முதற்பகுதி இப்பொழுது வெளியிடப் பெற்றுள்ளது. இந்நூல் பழங்காலத்திலிருந்து கி. பி. 600-ஆம் யாண்டு வரையிலுள்ள இலக்கிய வரலாற்றைக் கூறுகிறது. தமிழ்மொழி பயிலாத பிறரும் தமிழ் இலக்கிய வரலாற்றையறிய நல்லதொரு நூலாகும்.**

26. தேச பக்தன் : 1—1—1926

திருக்கோவையார்

[K. சோமசுந்தரம் பிள்ளை, B. A., B. L., தஞ்சை]

கோவின்மிசையேறுங் கோவுக்குக் கோவைபாடும் பீடும் மாண்பும் மாணிக்கவாசகருக்கே உரித்து. அறிவாற் சிவக் கூறனுகிய மணிவாசகர் அறிவை அறிவது பொருளெனக் கொண்டு, அறிவுளறியும் அறிவூற, அருளென்னும் கடலிற் படிந்து அரிதிற் சேர்த்துப் பழுதறத் திருத்திய நன்முத்து மணிகளாகிய அகப்பொருட் கிளவிகளை, ஒள்ளொளி ததும்ப பொருள் தொடர்பு விளங்குமாறு ஒழுங்குபடக் கோத்தளித்தது கோவையாகும். பல திறப்பட்ட அகநூல்களுள், இக் கோவை ஒரு திறம். இதனை திருக்கோவையார் எனவும் திருச்சிற்றம்பலக் கோவையார் எனவும் வழங்கப்படும். இது கைக்கிளை முதலாக காதலன்புடைப் பகுதியவாம், களவு கற்பெனு மொழுக்கப் பொருண்மேல் திணை முதலிய பன்னிரண்டு உறுப்புகளமையவும், காதலன்பின் முதிர்ச்சியில் தெய்வ மணங்கமழ்ந்து தோன்றவும் கட்டளை கலித்துறை நானூற்ருற் ஐந்திணை மக்கள் ஒழுகலாறுகளை திணைவளன் தழீஇய திணைப் பாகுபாடுகள் வழி தொடர்பு தோன்ற பாடப் படுவது.

இந்நூல் கோவைகளுட்டலைமைவாய்ந்து, கோவை எனும் தனிப்பட்ட பெயரான் வழங்கப்படுதலான், அதன் சிறப்பு நோக்கி இலககணக் கொத்துக்காரர்,

> 'பல்காற் பழகினும் தெரியா வுளவேற்
> றொல்காப் பியந்திரு வள்ளுவர் கோவையார்
> மூன்றினும் முழங்கும்'

எனக் கூறியது உணரற்பாலது, இனி 'ஆர்' என்பது

> 'இயற்பெயர் முன்ன ராரைக் கிளவி
> பலர்க்குரி யெழுத் தின்வினை யொடுமுடிமே'

எனும் தொல்காப்பியச் சூத்திரவிதிப்படி உயர்த்தற் பொருட் கண் வந்தசொல். இதனின் தனிச் சிறப்பினைக் குறித்து இந்நூற்பெயருக்கு உயர்திணை விகுதிபுணையப்பட்டது காண்க. 'திரு' எனும் அடைபுணர்த்துச் சொல்லப்படுதலான் ஈண்டு 'திரு' என்பது கண்டார் விரும்பப்படுந் தன்மை நோக்கம்

'அழகு' என்பர் பேராசிரியர். அகப்பொருளமைதி கொண்டு அப்பொருளுக்கு இலக்கியமாக, இஃது, தன்னில் படிந்தார் மனத்தைக் கவர்ந்து தன்னை அவர் விரும்பும்வகையில் மன எழுச்சிச் செம்மை செய்யும் சிறப்புத் தன்மையுமுடையது. மற்றும் பேரறிவு புலப்படுத்தும் சிற்றம்பலத்தானைப் பாட்டுடைத் தலைவனாகக்கொண்டு அவனது தன்மையினைச் சிறப்பிக்கும் முகத்தான், மக்களைச் செந்நெறிப்படுத்தும் போக்கினையுடையது. மணந்தொடங்கும் களவு நல்லவாமாறுவயங்கும் அன்பினிலே திளைக்கின்ற இரக்க இன்பம் உலகை வாழ்விப்பதென்றும் அத்தகைய களவின்பம் நாடறி நன்மணமாக அமைந்து, கற்பிற் படிந்து, தண்ணளிவிளங்க, சிறந்தது பயிற்றும் தூய்மையினைக் கிளக்கும் தன்மைத்தாய் அழகொளி பரப்பும் மாண்புடையதென்பதும் சுட்டிக்காண்பிப்பது.

இலக்கியச்சுவை தேரும் இயல்புடையார் ஒருவர் இந்நூல் வேத நூலாகவும், ஆகம நூலாகவும், அளவை நூலாகவும், இலக்கண நூலாகவும், இன்ப நூலாகவும் நயம் தரும் பெற்றி கண்டு,

> *'ஆரணங் காணென்பரந்தணர்; யோகியராகமத்தின்*
> *காரணங் காணென்பர்; காமுகர்காம நன்னூலதென்பர்;*
> *ஏரணங் காணென்பரெண்ணர்; எழுத்தென்பரின் [புலவோர்*
> *சீரணங் காயசிற்றம்பலக் கோவையைச் செப்பிடினே'*

எனக் கூறிப்போந்தார். கோவையார் இறைநெறி தழைத் தோங்கச்செய்யும் ஒரு பொதுமறை நூல். இதன்கண் இறைப் பற்று உலகியலோடும் வாழ்க்கை முறைகளோடும் ஒத்து பொதுநோக்கோடு செல்லும் சீர்மை பெரிதும் போற்றற் பாலது இஃது இறைபால் அன்பினைப் பெருக்கக்கூடிய மறை நூல். இதனில் தோன்றும், தலைவியும் தலைவனும் பொதுவாக எந்த ஆடவருக்கும் பெண்டிருக்கும் பொருந்தக்கூடிய வகையுள் அமைந்துள்ளனர். எனவே இது இன்ப அன்புக்குரிய பொது நூலாகும்

உலகியல், வேதநூல் ஒழுக்கம் என்பது சேக்கிழார் திருவாக்கு. இந் நூலின்கண் உலகியல்புரைத்தல் எனும் துறை விளக்கப்பட்டிருத்தலால்,

'சுரும்பிவர் சந்துந்தொடு கடன்முத்தும் வெண்சங்கு [மெங்கும்
விரும்பினர் பாற்சென்று மெய்க்கணியாம்வியன் கங்கையென்னும்
பெரும்புனல் சூடும்பிரான் சிவன் சிற்றம்பலமனைய
கரும்பன்மென் மொழியாருந்நீர் மையர்காணு நர்க்கே' (248)

இது உலகியலை பெரிதும் தன்னகத்தே கொண்டு ஆராயத் துணைசெய்யும் வேத அறிவு நூலாகுமென்பர் அறிஞர். 'வேதப் பயனுஞ் சைவம்' (சண்டேசுர நாயனர் புராணம்) எனப்படு தலால், வேதப் பொருளைத் தெளித்துரைக்கும் சிவாகமத்தை யும் இக்கோவையார் ஒக்கும். ஆகமநெறி சைவத்துறையினை விளக்குமாதலான், பரம்பொருளாகிய சிவபிரானை பாட்டுடைத் தலைவனுக்கொண்டு மெய்ப்பொருளை உண்மையாம் உணர்வு வழி கைவரத்துணை செய்யும் பான்மையால் இது ஆகமமுமாகி, ஆகமத்திற்கும் தெளிவு கூறும் அருள் நூலாகும். மற்றும் இறைவனை அணுகுதலை இது குறிப்பதினுன், முப்பொருளின் உண்மையும் தோற்றமும் புலனுகிறது. இதனுன் உயிர், இறைவன், இடையேயுள்ள தடை நீக்கம் ஆக மூன்று பொருள்கள் உளவாகின்றன. உயிரின் தடையாகிய பசுத் துவத்தை நீக்கி சிவத்துவத்தைச்சேர படிப்படியாக இரக்க வுணர்வோடு அழைத்துச் செல்வதே ஆகமமாகிய கோவை யின் சிறப்பு. எனவே முப்பொருள்களின் விரிவே கோவை யாரென்பது கண்டுகொள்க.

ஆகம நெறியினைக் கற்பிக்கும் செவ்விய இலக்கணமாக வும் இலக்கியமாகவும் கோவை அமைந்துள்ளது. இதன்கண் பரம்பொருளைத் தலைவியாகவும் பக்குவான்மாவை தலைவனுக வும், திருவருளைத் தோழியாகவும் ஆன்மபோதத்தை தோழ னுகவும், திரோதாயியை செவிலியாகவும், பரையினை நற்றுயாக வும் அமைத்து அகநானூறு எனும் நூலின்கண் காணப்படும் செய்யுட் தொகையே போன்று மணிவாசகர் தாமே வகுத்துக் கொண்ட நானூறு துறைகளிலும் அவற்றின் அனுபவத்தை, காண்டல், கருதல், உரை முதலியவற்றுன் வகைப்பட்ட அள வைகளான் உண்மை புலப்படுத்தப்பட்டுள்ளதை பல்காலும் சிந்தித்து மகிழற்பாலது. ஒரு சாரார், இது, தமிழ் மொழியின் அகப்பொருள் விழுப்பத்தைக் கூறுவதால், அப்பொருள்

இலக்கண நூல்களுக்கு தனி சிறந்ததோர் இலக்கியம் போன்று தோன்றியதென்பர் அகப்பொருட் கிளவிகளனைத்தும் இன்பப் பொருள் பற்றியனவாதலால், இதனை ஓர் இன்ப நூல் எனினும் அமையும். மற்றும் இது, யாவரும் பெரிதும் விரும்புதற்குரிய பாலின்பத்தைப்பற்றிய காமநூல்* எனக் கூறினும் ஒரோவழி பொருத்தமுடைத்து. சொல்லின்பம் நாடும் இலக்கணக் கவிஞர், செய்யுட்களில் போந்துள்ள ஒவ்வொரு சொல்லும் ஓசை நிரப்புவதோடமையாது பொருள் நிரம்பியதாகவும், குறிக்கொண்ட விரும்பும் கருத்தினை உருவாக்கும் உறுப்பாகவும் வீறுடன் விளங்குவதில் இறும்பூதடைவர்.

கோவையாரில் அளவை உண்டென கற்றறிந்தார் போற்றிப் புகழ்வர். அளவையுள், காண்டல், கருதல், உரை ஆகிய இம்மூன்றும் உண்மைதுணிந்து கோடற்குச் சிறந்தனவாகும். தலைவியை அணங்கலல்லள் என்பதை கண்ணிமைத்தல், அடிநிலந்தோய்தல், சூடிய மலர் வாடுதல் எனும் உரை அளவையாற் கண்டவுணர்வால் கொண்ட துணிபு கருதலளவை முறையான் நிகழ்ந்தமை,

'பாயும் விடையரன் றில்லை யன்னாள் படைக் [கண்ணிமைக்குந்
தோயுநிலத்தடி தூமலர் வாடுந் துயர மெய்தி
யாயு மனனே யணங்கல்லளம்மா முலைசுமந்து
தேயுமருங்குற் பெரும்பணைத் தோளிச்சிறு நுதலே (3)

என்பதில் இனிது பெறப்படும். மற்றும் தலைவன் வேட்டையிலும், தலைவி தினைப்புனக் காவல்மீதும் மனமில்லாததும், அவர்களது கூட்டவுண்மையினை அவர்களது கண்ணும் முகமும் இயல்பாகவே காட்டிவிடுவதையும், இருவர் நினைவுமொருவ்ழியுணர்தலாவதையும் கருதலளவையாற்றுணிகின்றதை கோவை அறுபத்தாறும் செய்யுள்,

---

* விருப்பப்பொருள் தரும் 'காம்', பின் 'அம்' விகுதி பெற்று காமம் ஆகியது. 'தாமின்புறுவது உலகின்புறக் கண்டு, காமுறுவர் கற்றறிந்தார்' (குறள் 399) என்பதில் 'காம்' என்பது இழிபொருள் அல்ல என்பது அறியப்படும். உயர் பொருள் தந்த சொல் இழிபொருளடைதலும், இழிபொருள் தந்த சொல் உயர்பொருள் பெறுதலும் கால இயல்பு.

'மெய்யே யிலற்கில்லை வேட்டையின் மேன்மனமீட்டிவனும்
பொய்யே புனத்தினை காப்பதிறை புலியூரனையாண்
மையேர் குவளைக்கண் வண்டினம்வாழுஞ் செந்தாமரைவா
யெய்யே மெனினுங் குடைந்தினின் பத்தேனுண்
டெழிறருமே'

நன்கு புலப்படுத்துதலைக் காண்க.

இந்நூலினை உலகியல் கண்கொண்டு நோக்குவார்க்கு, சிற்றின்பப்பொருளை பலவாறு சிறப்பித்திருந்தாலும், வீட்டின்பம் கருதி கூர்ந்து நோக்குவார்க்கு இதன்கண், சிவஞான யோகத்தியல்பும் வீட்டின் தன்மையும், வீடுற்றோரது இன்ப நிலையினையும், உலக இயற்கைப் பொருள்களில் உள்ளப்படாத திருவுருவை உள்ளுதலும் தோன்றுமற்போகா இந்நூற்கு உரைகண்டார் பேராசிரியர், திருக்கோவையாரை, மணிவாசகர்

'அறிவநூற் பொருளு முலகநூல் வழக்குமென
இரு பொருளுநுதலி எடுத்துக் கொண்டனர்'

என்றும், அவ்விரண்டனுள் 'ஆகமநூல் வழியினுதலிய ஞான நுண் பொருளினையுணர்த்துதற்கரிது, எனக் கூறுதல் கருதற் பாற்று கோவையுரையுள், உயிரென வியத்தற்றுறைக்குரிய

'நேயத்த தாய்நென்ன லென்னைப் புணர்ந்துநெஞ்
சந்நெகப்போ
யாயத்த தாயமிழ்தாய வணங்காய ரனபலம்போற்
றேயத்த தாயென்றன் சிந்தையதாய்த் தெரியிற்பெரிது
மாயத்த தாகியிதோ வந்துநின்ற தென்மன்னுயிரே'

எனுஞ் செய்யுட்கு வெளிப்படை பொருளாகிய சிற்றின்பப் பொருளை முதற்கண்ணுரைத்துப்பின் 'என் மாட்டருளுடைத் தாய் முற்காதலித்துவந்து என்னைக்காட்டி அருளில்லதுபோல் என்னெஞ்சுடையும் வண்ணம் போய்த் தன் மெய்யடியார் குழாத்ததாய் நினைதொறும் அமிர்தம்போல இன்பஞ்செய்து கட்புலனாகாமையாற்றுன்பஞ்செய்து அம்பலம் போலும் நல்ல தேசங்களின் கண்ணதாய்வந்து என்மனத்ததாய் இத் தன் மைத்தாகலிற் பெரிதும் மாயத்தையுடையதாய் எனது நிலை பெறுமுயிர்வந்து தோன்றா நின்றது, என வேறுமொரு பொருள் விளங்கியவாறு கண்டுகொள்க' என சிலேடை வகையாற் பேரின்பப்பொருளைக் கூறுதலானும், மற்றும் தூதுகண்டழுங்கல் எனும் துறைக்குரிய

'வருவன செல்வன தூதுகளேதில வான்புலியூ
ரொருவன தன்பரினின்பக் கலவிக ளுள்ளுருகத்
தருவன செய்தென தாவிகொண் டேகியென்
னெஞ்சிற்றம்மை
யிருவின காதல ரேதுசெய் வானின்றிருக் கின்றதே'

எனுஞ் செய்யுளுக்குரிய சிற்றின்பப் பொருளை முன்னுரைத்துப் பின் 'தன் மெய்யன்பர்போல யானுமின்புற வுள்ளுருகுங் கலவிகளை முன்செய்து பின் எனது ஆவிபோயினாற் போலத் தாம்பிரிந்துபோய் ஒரு ஞான்றுங் கட்புலனாகாது யானினைந்து வருந்தச்செய்த காதலர் இன்று ஏது செய்யவிருக்கின்றாரென வேறுமொரு பொருள் தோன்றியவாறு கண்டுகொள்க' என பேரின்பப் பொருளைக் கூறியவாற்றானும், தெரிந்துகொள்க.

மற்றும் மணிவாசகர் சிற்றின்பச்சுவை பயக்கும் ஒழுகிய லாறுகளைக் கூறுவது போல், தாம் கூறக் கருதிய உள்ளுறை யாம் சிவஞான யோகத்தை அத் துறைகளுள் உடனுறை பொருளெனப்படும் இறைச்சிப் பொருளாகப் பொதிந்து, செய்யுள்தோறும், அகத்திணை யொழுக்கம் இறைச்சியாகவும் அதனோடு உள்ளுறை பொருள் சிவஞான யோகமாகவும் கூறியருளினார். தாலி புலாக நியாயம் பற்றி இரண்டு காட்டுதும். அவை,

'அணியுமமிழ்து மென்னாவியு மாயவன்றில்லைச் சிந்தா
மணியும்பராரறியா மறையோனடி வாழ்த்தலரில்' (5)

'ஏழுடையான் பொழிலெட்டுடையான் புயமென்னை
முன்னாள்
ஊழுடையான் புலியூர் ... ... (7)

என்பன. புறத்தே சிற்றின்பப் பொருளையும் அகத்தே பேரின்பப்பொருளையும் அமைத்துப்பாடப்பட்டது இக்கோவை யாதலான், சிற்றின்பப் பொருளையே பாரித்துரைக்கும் ஏனைக் கோவைகளிலும், இக் கோவை தலைமைவாய்ந்து சிறந்து, வீடுபேற்றிற்குரிய ஞான நூலாக விளங்குதல் வெள்ளிடை மலை.

அகப்பொருள் இலக்கண உறுப்புகளுக்கு இலக்கியமாய திருக்கோவையார் வாழ்வுக்குரிய ஒப்புயர்வற்ற இயற்கை நூல். இதனைப் பயில்வார்க்கு அமைதி, ஒழுக்கம், தன்னலமறுதல்

முதலியவற்றை அளிக்கும் முகத்தான், பயிற்சிகாரணமாக உண்மை, அறிவு, இன்பம் முதலாயவற்றை எளிதில் உணரும் வண்ணம் மணிவாசகர் எடுத்துரைத்துள்ளார். இந்நூல் சங்க நூற்களோடு ஒன்ருகவைத்து மதிக்கக்கூடிய பெருமையுடைய தாதலான், இதன் மாட்சிமையினை நன்குணர, சங்க நூற் பயிற்சி பெரிதும் வேண்டப்படும் தொல்காப்பியப் பற்றுக் கோடுடையதாய், இதன்கண் தொல்காப்பியர் சுட்டும் முதல் கரு, உரி எனும் முப்பொருள் அமைப்புண்மையும் இலக்கிய நெறியின் போக்கும காண இயலும். தொல்காப்பியர் கூறும் பொருளணிகளாம் நால்வகையுவமமும், எண் வகை மெய்ப் பாடும் கோவையார்க்கு அழகு ஊட்டுவதினுன் அதனைக் கற் றுணர்ந்தோரும் உள்ளத்திற்கு இனிமை பயக்கும் பண்பின வாயின.

அகத்திணையின் அமைப்பினை அழகுற தொல்காப்பியர் வகுத்ததில், வள்ளுவர் இல்லறத்தால் எய்தும் இன்பினைக் கண்டார். அதனையே மணிவாசகர் கனிவுற கோவையில் நூலுணர்வாலும் நுண்ணறிவாலும் விளக்கி உயிர் இறைவனை ஒன்றுகின்ற நெறியினையும், இறை உயிரினை உய்க்கும் முறை யினையும், காதல் வாழ்வு கடவுளை யெய்தவைக்கும் வகையினை யும் கிளந்து, காதலொளியையும் இறை யொளியையும் ஒருங்கே ஒளிரவைத்தார். இறையின்பம் முழுதும் பயக்கும் இந்நூலின்கண், முதற் செய்யுளின் முதற் சொல் ‘திருவளர்’ என்றதை ஈற்றுச் செய்யுளின் கடைச்சொல் ‘ஊதியம்’ என் றதோடு சேர்த்து ‘திருவளர் ஊதியம்’ எனமுடிதல் கொண்டு இறைவழி திருவளர்தல் உயிருக்கு ஊதியம் எனக்கொள்ளல் சீரிது. இதனுன் இந்நூல் உயிரின் வெவ்வினைகளை ஓட்டி. பேரின்பத்தை ஊட்டும் மாண்பினையும் இணையிலாப் பெருமை யினையுமுடைய தென்பது பெறப்படும்.

இத்தகைய அகப்பொருட் கோவையின்கண் தனித் தமிழ் மரபைநுனித்தறிந்துரைக்கும் ஆற்றலும் அழகும் ஒருங்கே காணப்படும். தமிழ் அமிழ்தினைச் சுவை செய்யும் முறையில், நாற்பொருள் பயந்து நறுஞ்சுவைபடக்கூறும் இச்சிறு காப்பி யத்திலுள்ள ஒவ்வொரு கட்டளைக்-கலித்துறையாய செழும் பனுவலிலே இறைப் பேரெழில் பிரியாது நிழல்போலிருந்து பூக்களின் போக்கினிலே இறையொளி வீசி, மலரும் மண மும், சாந்தும் சீதமும் போன்று குணியும் குணமுமாகச் செல்

லும் நடை மிக்கதோர் இன்பம் பயக்கின்றது. இறையெழில் என்றும் நிலைபேருகத் தங்கிப் பொலியுங்கால், மறைபயின்ற மணிவாசகர். அன்பு அறிவு நிலைகளை பேரின்பக் காதலின் நிலையில் கூட்டி அன்பே சிவமாய் அமர்ந்திருப்பதை சுட்டிக் காட்டிப் பின்னர், தலைவனும் தலைவியும் தமியராய் தெய்வ மிடைநிற்ப, ஓராவிற்கு இருகோடு தோன்றினுற் போன்று. தம்முள் ஒத்த அன்பால் விழுங்கப்பட்டு ஒருயிர் ஈருடலென ஒன்றி வாழும் ஒழுங்குபட்ட வாழ்க்கையில் அன்பழகுத் தெய்வம் எவ்வண்ணம் எழுந்து கரணங்களையும் ஊனையும் உடலையும் தன்வண்ணம் ஈர்க்கும் மாண்பினையும் மெய்ப்பாடு தோன்ற, தெய்வங்காட்டும் தமிழ்ச்சொல்லாலே உள்ளம் மயங்கிடக் கூறும் பெற்றி பெரிதும் பாராட்டற்பாலது. மற்றும், மொழிப்பற்ருேடு வாழ்க்கை நலம் விளங்க, ஒவ்வொரு செய்யுளும், செவ்விய சொற்பொருளமைதியும் நேரிய காதல் பெருமிதமும் நிறைந்த உயிரோவியமாய் வயங்குமாறு. ஓசை நயம் மிகத்தோன்றும் விழுமிய பெருமையினையுடையது. உலகியல்பு, இறையியல்பு, உயிரியல்பு கூறும் கோவைப் பாக்கள், பயில்வார்க்கு மொழியறிவினையும் ஒழுக்க உணர்வையும் நல்கி இன்பஞ்செய்து அன்னுர் சிந்தனையிலும் தேனூற்றுபோல நின்று மனத்தின்கண் இறைபற்றிய ஆய்வினையும் தோற்றுவிக்கும்.

மணிவாசகர் இயற்கையிற் படிந்து இயற்கைப் புலம் பெற்றவராதலால். ஆண்மை, பெண்மை எனும் இரு பண்புகள் உலகை இயக்கும் தத்துவம் கொண்டுள்ளன வென்றும், அவை வாழ்வுக்கு இன்றியமையாததென்றும் கோவையின் கண் குறிப்பாகக்கூறி, இறைமையில் பெண்மை கருணையுடையதாய் உயிர்கட்கு நலஞ்செய்யும் பாங்கினையும், பெண்மையால் பெறும் இறைவனது பெருந்தகைமையினையும் புலப்படுத்த, முதற் செய்யுளின் கண்ணே தலைவியை, ‘தெய்வ மருவளர் மாலை’ யாக உருவகப்படுத்தி, ஈற்றுச் செய்யுளிலும் தலைவனை ‘அணிதில்லைச் சிவனடிக்குத் தாரணி கொன்றையன்’ என உருவகித்து அவன்பால் சிவமணம் தோன்றச் செய்துள்ளார். நாதபிந்து விளக்கமே உலக வாழ்க்கையெனக் கூறவந்த மணிவாசகர், வாழ்க்கை எனும் கோவையாகிய மின்சாரப் பெட்டகத்திலே, பெண் வடிவாகிய சக்தி புலனுகிப் பூரணம் பெற, ஆண் வடிவான சிவத்தை விரும்புவதாகிய காதலின்பம்

எனும் கந்தகத் திராவகத்தைப் பெய்து, பெண்ணாகிய துத்த நாகத் தகடையும் ஆணாகிய செப்புத் தகடையும் தாம்பிரகம்பி யாகிய சுத்தபோகத்துடன் தூய்மையும் பொருந்தச் செய்து தெய்வத் தன்மை நடம் புரிவதெனத் தோன்றும் அற்புதங் களின் வழி காதலின்பம் கனிந்து பற்றற்ற வுணர்வாய்த் தெளிந்து பேரின்பமாய் பரந்து விரிந்து இறைமையாய் இசை கொள்ளும் பெற்றிமையினை யருளினர். பெண்மையும் சக்தி யும்) ஆண்மையும் (சிவமும்) ஒரு மின்மீட்டியில் நேர்நிலை மின்னோட்டங்கள் என மணிவாசகர்கொண்டு, ஆணும் பெண் ணும் அன்புடன் அமைவுறக்கூடி வாழ்வை சிவசக்தி யோக மார்க்கவகை செய்யும் மாண்பினையும் கூறிப்போந்தார். மாந்தர் அருளுடையராய் சக்தியாகிய குண்டலியை சிவத் துடன் பொருத்திவைத்து சிவானந்தத் தேறலை உண்டுபண் ணுதலே கோவையாரின் உள்ளக் கிடக்கையாகும்.

> சொற்பாலமுதிவள் யான்சுவை .....நான்
> இவளாம் பகுதிப்பொற்பு யார் அறிவார்'? (8)

என வரூஉம் கோவை வாக்கினை நோக்குக.

ஞாலத்து எப்பொருள்களிலும் — உண்மையும் பிழம்பும் உணர்த்தப்படுவன, உண்மை யுணர்த்தி பிழம்பு உணர்த்தப் படாதன—இறைவனைக் காணும் பேறுபெற்றும் போற்றி வழி பட்டும், வாழவே கோவைக்கிளவிகளில், தெய்வப்பெற்றிய ராகிய மணிவாசகர், மக்கள் எளிதே ஏற்கும் முறையில் அகப் பொருள் உறுப்புக்கள்வழி வீடுபேற்றிற்குரிய உளவினை அரு ளியது உன்னுக. அன்புருவாய் பேரின்ப வெள்ளத்திற்றிளைத்த மணிவாசகர், புறத்தே அமைதியும், இன்ப நிறைவும் இசைய நிலவ. அகவாழ்வு சிறக்கவேண்டுமென்றும், நிறைந்த இன் பின் முதிர்வே இறைமையாய் ஒளிருமென்று கூறி வாழ்விய லில் மக்கள் நிறையுயிராய் இறைமை பெற்று ஒளிரலே சால் பென வற்புறுத்துவாராயினர். பிறவியின்பயனை அளிக்கவல்ல செந்நெறிகளைத் திறம்படக் கூறும் கோவையின் இன்பப் பேற்றினைப் பெற, இதனையே நன்கு அறிதலேசாலும். நவில் தொறும் நாச்சுவை பெருக்கி பயில் தொறும் இலக்கியச் சுவை யோடு பேரின்பப் பக்திச் சுவையினையும் பயக்கும் கோவைப் பாடல்களை அச்சுவைகளின் மாட்சிக்காகவே பயிலப்படல் வேண்டும்.

உலகியலைத் தழுவி எழுந்த இக்கோவையில், செந்நா வன்மைச் செவ்வறிவு வாய்ந்த மணிவாசகர், அன்பினாலேயே நுகரும் இன்பத்தை ஐவகைத் திணைக்கும் உரித்தாகிய முதற் பொருள், கருப்பொருள், உரிப்பொருள் வழி விளக்க, வினை, பயன், உறுப்பு, உரு, பிறப்பு என்பவைபற்றி நிகழும் உயர்ந்த தெய்வீக உவமைகளையும், அவற்றின்பாற்பட்ட உள்ளுறை உவமங்களையும், ஏனைய வெளிப்படை உவமங்களையும் உருவகங்களையும், பிற்காலத்து பழமொழிகளாக வழங்குமாறு அமைத்து உண்மை நவிற்சி சாலவும் நிறைய கோவைச் செய்யுட்களை யாத்தார். முதற்றிருப்பாட்டின்கண், மணிவாசகர், ஐவகை நிலங்களுக்குமுரிய வேவ்வேருகவுள்ள மலர்களால் யாக்கப்பட்ட மாலையாகத் தலைவியை உருவகித்து, வெவ்வேறு மணத்தினையுடைய ஐவகை மலர்களும் ஒருங்கே தெய்வ மணம் வீசின என இன்பம் பயக்குமாறு, அம்மாலையினை, தெய்வ மருவளர்மாலை'யாக ஆக்கினர். தாமரை (மருதம்) முகத்திற்கும், காவி (நெய்தல்) கண்களுக்கும், குமிழ் (முல்லை) நாசிக்கும், கோங்கு (பாலை) கொங்கைகளுக்கும், காந்தள் (குறிஞ்சி) கரங்களுக்கும், உவமை யாதலின் மணிவாசகர்,

'திருவளர் தாமரை சீர்வளர் காவிகளீசர் தில்லைக்
குருவளர் பூங்குமிழ் கோங்குபைங் காந்தள் கொண்
[டோங்கு தெய்வ
மருவளர் மாலை'

எனக்கூறி உருவகையால் உலகத்துப் பொருள்கள்வேறு வேருய் இருப்பினும், அவற்றில் இறைவன் ஒருவனே தெய்வ மணங்கமழ அமைந்திருக்கின்ருன் எனவும் சுட்டிக்காட்டினர்.

இஃதே போன்று தலைவனைப்பற்றிக் கூறுங்கால் வேண்டாமைக் கொடுத்தலால் காராகவும் வேண்டக் கொடுத்தலின் கற்பகமாகவும், நூலறிவு புலவர்களுக்கு நற்றுணையாகவும், இசையுணர்ந்தவனுதலாலும் கெழுதகைமை வாய்ந்தவனுதலாலும் பாணர் ஒக்கல் (மருதம்) ஆகவும், நினைத்தது கொடுத்தலினுல் சீரிய சிந்தாமணியாகவும் (குறிஞ்சி அணிதில்லைச் சிவனுரது சேவடிக்குத்தாராகி அச்சிவனுல் அணியப்படும் கொன்றை மலரின் (முல்லை) தன்மையினையுடையவனுகவும், சான்ருேர் தமக்கு நிதியாயிருத்தலின் சங்கநிதி (நெய்தல்) யாகவும், நண்பர்க்கும் பகைஞர்க்கும் தப்பாது பயன் கொடுத்தலின்

விதியாகவும் உற்றவர்க்கு ஊர்க்கண்ணிய ஊருணியாகவும், அதனால் வரைவின்றி யாவர்க்கும் இவன் 'பெறும் ஊதியம்' ஆகவும் உருவகிக்கப்பட்டிருக்கின்ற சிறப்பு உளங்கொளாக் களிநலம் அளிப்பதாகும்.

'காரணி கற்பகங் கற்றவர் நற்றுணை பாணரொக்கல்
சீரணி சிந்தாமணி யணிதில்லைச் சிவனடிக்குத்
தாரணி கொன்றையன் றக்கோர்தஞ் சங்கநிதி விதிசே
ரூருணி யுற்றவர்க் கூரன் மற்றியாவர்க்குமூதியமே (400)

இக்கிளவி பரத்தையர்ப்பிரிவால் உண்டாய ஊடலைத்தீர்த்தற்கு கூறப்பட்டமையான் பிரிவை உரிப்பொருளாகக் கொண்ட பாலையும் ஈண்டு சுட்டப்பட்டது கண்டு தெளிக. இங்ஙனம் கருத்தூன்றி ஆயுங்காலை, பரந்து விரியும் ஆழமும் அகலமுமான புதுப் புதுப் பொருளை இன்பமீதூரத்தரும் மணிவாசகரது புலமை உவமைகள். எழுதரிய இயலையுடைய இறைவனது புகழ்போன்று பரந்து செல்வதொன்ருகும்.

திருக்கோவையார், தெய்வமணங்கமழும் மொழியின் ஓய்வற்ற எழிலை உணர்த்தும் சைவ இன்ப அன்புக்குரிய அகநூல். தமிழ் அகநூற் கடலினின்றும் கடைந்தெடுத்த தெள்ளமிழ்தம். இதன்கண் ஞானவள்ளல் மணிவாசகர், மக்கள் மனம்கொள்ளும் வண்ணம். காதலியலைக்கூறி காதலன்பின் மிகுதியே கற்பின் செல்வம் என உரைத்து, இறையியற் கலையையும், அருளொடு வளர்ந்த அறிவியற் காதலின்பக் கலையினையும் இயம்பி, அகத்திணைகொண்டே, இயற்கையிலே கலந்துறையும இறையினைக் கண்டு, உயிர், இறைவனை உணர்ந்து எய்தலாகும் அருங்காதல் நெறியினை நவின்றருளும் செம்மை நனி விளங்கும் இங்ஙனம் மெய்யுணர்வெய்தித் தெய்வப் புலமை சான்ற மணிவாசகரது, அருணலங்கனிந்து அமிழ்தம் சொரியும் திட்ப நுட்பஞ் செறிந்த கோவைப் பாக்களின் நலம் அளத்தற் கரியதாக விளங்கி, கோவையார் இறைநூலென்ற கருத்துக்கு அரண் செய்து, அறிஞருலகை இன்புறுத்தும் எட்டாத திருமறையாகும். சைவத் திருமறைகள் பன்னிரண்டனுள், இதனைத் திருவாசகத்துடன் எட்டாந் திருமுறையென, ஆக்கம்பெறும் தக்க சான்றில்லாது மரபு நெறி பிறழ, இயற்கை நெறி திறம்பி, பொருளுண்மை திரித்துக் கொள்வதாகிய விந்தை. சிந்தனையின் ஆராய்ச்சிக்குரியதாகும்,

---

(சென்ற இதழின் தொடர்ச்சி)

ஈரத்தின் சுவடு

திரு இரா. குழந்தைவேலு, எம்.ஏ.,

வெள்ளி வீதி: மருதி, இத்துன்பத்தினைத் தாங்கியிருத்தல் நின் அறிவுக்கு அழகு. யான் சொல்வன கேள். வாழ்தலைப் பற்றியே எண்ணல்வேண்டும். இளமைக்குரிய எண்ணம் ஈது. நின் நெஞ்சத்தில் அரும்பிய சாவு எண்ணம் ஒழிக. இவ்வேளையில் விம்மி அழுதிடும் அழுகை நின் நெஞ்சக்களவை வெளிப்படுத்தும். இதனை ஊர் அறிந்தால் அலர் வளரும். எவ்வழியும் பெண் பிறவிக்குப் பெண்மையைக் காப்பதே பெரும்பெண்மையாகும். இதனை மறவாதே. கலக்கம் நீக்கு. நீ செலுத்திய பார்வையை அவர் வாங்கிக்கொண்டது உண்டா? வாங்கிக்கொண்ட காதல் பார்வையால், தம் நெஞ்சத்தில் உயிர்க்காதலாக வளர்த்து, அவர் கண் தர வந்ததா நின் காதல்? எனவே, நைந்து உருகி அழும் குறை உனதே இதனை நீ நன்கறிவை.

மருதி: குறை எனதே. அறிவேன். எனினும், எப்படி யான் அவரை மறத்தற்கியலும்? கொழு கொம்பு பெருது திகைக்கும் கொடி, யான் என் நிலை இன்னது அந்நாளில் நெஞ்சில் எழுந்த நாணம் என் காதலை அவருக்கு வெளியிடத் தடையாயிற்று என் காதலை மறைத்தது உண்மையே. மறைத்துத் தடுக்கவே காதல் வளரும் என்பதனை அன்று விளங்கிக் கொள்ளும் அறிவு எனக்கு இல்லை. தோழி, என் செய்வேன்? எவ்வாறு உயிர்வாழ வல்லேன்? (அழுகிருள்)

வெள்ளிவீதி: மருதி, ஓயாது அழுதால் உடல் மெலியும். அழாதே, நின் வாட்டம் என்னைத் துன்புறுத்துகிறது.

மருதி: என் கண்கள் அழுகின்றன. யான் என்ன செய்ய இயலும்? கன்றும் குடியாது நாமும் கறந்து பருகாது, பசுவின் மடி நிறைந்த பால் வீணே மண்ணில் சிந்திவிடின் பயன் ஏது? எனக்கும் நலஞ்சுரக்காது, அவருக்கும் வளம் ஊட்ட உதவாது (விம்மி) என் மாந்தளிர் மேனியழகினைப் பசலை பரவிப் பாழாக்கி ..... (அழுகிருள்)

வெள்ளிவீதி: மிக அழுதல் வேண்டா, நாளை, நம் காவிரி யாற்றுத்துறையில் புதுப்புனல் விழா. விழாத்துறைக்கு நம் மன்னர் கரிகாற்பெருவளத்தான் வருதல் கூடும் அவ் விழாவிற்கு அவரும் ஆதிமந்தியும் (உரையாடலை நிறுத்தித் தன் சுட்டு விரலைக் கடித்துக்கொள்ளல்).

மருதி: (சிறிது தெளிவோடு) வெள்ளிவீதி, பேசு; பேசு. தயக்கம் ஏன்? ஆதிமந்தியின் காதலொருமை மணம் பழியுடையதன்று; போற்றத்தக்கது. அவள் தனிப்பேறு கொண்ட அழகி, என் நெஞ்சத்தில் நின்றவர் நெஞ்சத்தே புகுந்த ஆதிமந்தி தொழத்தக்கவள். புகழத்தக்க அவள் பெண்மை வாழ்க. தோழி, நாளை நின் உதவி வேண்டும்.

வெள்ளிவீதி: நின் வாழ்வு விளங்கல்வேண்டும் என்பது என் எண்ணம். சொல்லு, என்ன உதவி வேண்டும்?

மருதி: நாளை, நம் அன்னையாரிடம் கேட்டுக் காவிரித் துறைக்கு என்னை அழைத்துச்செல்லவேண்டும் இது, நின் பொறுப்பு.

வெள்ளிவீதி: இஃது எளிதில் இயல்வதே ஆ! இப்போது என் மனம் குளிர்ந்தது! அன்னையார் இனிதே விழாக்காண இசைவார். ஐயம் வேண்டா.

மருதி: நாளை (கண்ணீரை நிறுத்த ஆற்றளாய் விம்முகிறாள்.)

வெள்ளிவீதி: நன்று; நன்று. எப்படி நின் வலியற்ற மனத்தில் ஆறுதல் எழுப்பித் துன்பங் குறைத்து மகிழ்வேன்? நான் மறைவேனுக!

மருதி: தோழி, துயரம் தணி நாளை (தழுவிக்கொண்டு) உன்னையும் பிரிந்து (அழுகிறாள்).

வெள்ளிவீதி: கொடுமை விளைக்கும் எண்ணங்களை விடு, என்னே பேதைமை! (தொடரும்)

பாராட்டு

அண்மையில் நடைபெற்ற நகராட்சி மன்றத் தேர்தலில் நமது சங்க நிறைவேற்றுக் கழக உறுப்பினர்களாகிய திருவாளர் S. பெத்தண்ணன் அவர்கள் நகர மன்றத் தலைவராகவும், திருவாளர் A. V. பதி அவர்களும், திருவாளர் சி. சாமிநாதன் அவர்களும் நகர மன்ற உறுப்பினர்களாகவும் தேர்ந்தெடுக்கப் பெற்றுள்ளார்கள். இதுகுறித்து நமது சங்கத்தில் 16-7-69-இல் பாராட்டு விழா நடைபெற்றது. இம் மூன்று சங்கத் தொண்டர்களையும் சங்கத்தலைவரும், திரு. ந. மு. கோவிந்தராய நாட்டார் அவர்களும் பாராட்டிப் பேசினார்கள். சங்கச்சார்பில் ஒரு வாழ்த்துப்பா பாடப்பெற்றது. சங்கப் பொருளாளர் நன்றி கூறிய பின்னர் சங்க வாழ்த்துடன் பாராட்டுக்கூட்டம் இனிது முடிவுற்றது.

வாழ்த்துரை

சங்கச் சார்பில் பாடியது —

"தொண்டைவள நாட்டினிலே காஞ்சியினிற்
பிறந்ததுரை அண்ணா வேபோல்"
வண்டமிழ்சேர் தஞ்சையினில் வந்துதித்த
பெத்தண்ணா! வளமை மிக்கோய்!
"கண்டதொரு தம்மகவை அவைக்குமுத
லாக்குபவர் கருத்தே போல"
தண்டலைசேர் தஞ்சையினர், தஞ்சைநகர்
அவைத்தலைமை தந்தார் நிற்கே.

அருள்வாழும் நல்விழியும் அறம்வாழும்
நன்மனமும் அமைந்து நிற்கப்
பொருள்வாழும் நற்கரமும் புகழ்வாழும்
நற்செயலும் பொருந்தும் அண்ணா!
"இருள்வாழும் உலகினுக்கே ஒளிவாழும்
விளக்கே போல்" இசைந்து நின்று,
தெருள்வாழத் தஞ்சைமக்கள் திணம்வாழச்
செய்பணியைத் தேர்ந்து செய்வாய்.

மக்கள்சொலுங் குறைதம்மை மனம்பதித்து,
நதிபோல மாண்பு நல்கி,
திக்கவரால் புகழ்பெற்றுத் தினந்தோறும்
பலநன்மை தேர்ந்து செய்யும்

மிக்கவனே! வேங்கடா சலபதியாய்
மக்களுக்குப் பதியே யாகும்
தக்கவனே! தஞ்சைநகர் அவைக்குறுப்பாய்
வந்ததெங்கள் தவமே யன்றோ.

அன்பேபோல் அன்பில்வினை ஆர்வம்போல்
ஆர்வத்தால் அணைந்து நின்ற
இன்பேகொள் நண்பேபோல், சாமிநா
தப்பெயர்கொள் இனியோய்! நீதான்
துன்பேகொள் மக்களுடைத துயர்தீர்த்துச்
சாமியெனச் சொல்ல நின்றாய்;
முன்பேகொள் தஞ்சைநகர் அவைக்குறுப்பைப்
பின்னரும்நீ முறையாற் பெற்றாய்.

"காவிரியில் நீர்பெருகின் உலகினுக்குப்
பயன்றருமோர் கணக்கே போல"
நீவிர்பெறும தஞ்சைநக ரவைத்தேர்வின்
வெற்றியிந்த நிலத்தார்க கன்றோ?
"பூவிரியுங் குளந்தேடி வண்டெலலாம்
இசைபாடிப் புகுதல் போல"
நாவிரியப் புகழ்பாடி மககளெலாம்
நுமைத்தேடி நண்ணு நின்றார்.

உளமெல்லாம், தமிழிணையே உன்னுகின்ற
உமாமகே சுரப்பே ரண்ணல்
வளமெல்லாம் உழைப்பெல்லாம் தந்துமிக
வளர்த்ததமிழ்ச் சங்கம் வாழ,
"களமெல்லாம் வெற்றிபெறும் மூவேந்தர்
வந்தமர்ந்த காட்சி போல"
உளமெல்லாம் களிகூர வந்தமர்ந்தீர்
உம்செயல்கள் உயர்ந்துவாழ்க.

தன்னலத்தை மிகப்பேணிப் பொது நலத்தைத்
தமதாக்கும் தகுதியில்லார்
என்னலத்திற் சிறந்தாலும் அஞ்சாமல்
எதிர்க்கின்ற இயல்புள்ளோரே!
தன்னலங்கள் மிகப்பெற்றுத் தஞ்சைநகர்
நும்நாளில் நன்கு வாழப்,
பன்னலத்துப் பணிபுரிந்து, பார்புகழப்
பல்லாண்டு பண்பாய் வாழ்க.

இங்ஙனம்,

கரந்தைத் தமிழ்ச் சங்கத்தார்கள்.